[1994 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 4 இடங்களில் கணிப்பொறிகள் செயல்படுத்தபட்டு வருகின்றன. மேலும் 8 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கணிப்பொறி நிறுவ அரசு ஆணைகள் வழங்கியுள்ளது. இந்த நிதி ஆண்டில் காஞ்சிபுரம் மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் கணிப்பொறி நிறுவுவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 400, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

400--

அரவக்குறிச்சி தொகுதி, க. பரமத்தியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

***23566--திருமதி கே. மரியம் உல் ஆசியா:**
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி தொகுதி, க. பரமத்தியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் கல்வி மாவட்டத்திலே அரசினர் தொழில் பயிற்சி நிலையம் எதுவும் இல்லை. இதனால் இப்பகுதியில் படிக்கின்ற மாணவர்கள் தொழில் கல்வியில் பயிற்சி பெறுவதற்காக சுமார் 120 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருச்சிக்குச் சென்று படிக்கவேண்டியதாக இருக்கிறது. கரூர் கல்வி மாவட்டத்தில் விவசாயிகளும், நெசவாளர்களும் அதிகமாக இருப்பதன் காரணமாக இங்கே விசைத் தறிக் கூடங்கள் மற்றும் பல்வேறு தொழில் கூடங்கள் இருக்கின்றன. எனவே இந்த பகுதியில் படிக்கின்ற, அதாவது ஐ.டி.ஐ. படிக்கின்ற மாணவர்களுக்கு இங்கே வேலைவாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றதன் காரணமாக இந்தப் பகுதி மக்கள், அதாவது மாணவர்களின் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் ஐ.டி.ஐ.

1994 ஏப்ரல் 26]

பல்வேறு துறைகளில் சேர்ப்பதற்கு ஆர்வத்தோடு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட தேவைகள் அதிகமாக உள்ள பகுதியில் ஒரு ஐ.டி.ஐ. கூட இல்லாததனால் மேலும் தொலை தூரங்களுக்கு சென்று அவர்கள் படிக்க வேண்டியதாக இருப்பதால், இங்கு ஐ.டி.ஐ. துவங்குவதற்கான அனைத்து வசதிகளும் இருப்பதன் காரணமாக, பொதுமக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அதே நேரத்தில் க. பரமத்தியில் ஐ.டி.ஐ. தொடங்குவதற்கு 30 ஏக்கர் நிலம் பொதுமக்கள் தருவதற்கு முன்வருகிறார்கள் என்பதையும், இன்னும் சொல்லப்போனால் அங்கே ஐ.டி.ஐ. துவங்குவதற்கான டூல்ஸ் மற்றும் எக்குவிப்மென்ட்ஸ் வாங்குவதற்குப் போதுமான நிதி உதவியையும் தருவதற்கு முன்வருகிறார்கள் என்ற அடிப்படையின் காரணமாகவும் இங்கே ஐ.டி.ஐ. ஆரம்பிப்பதற்குத் தேவையான வசதிகளும் இருப்பதன் காரணமாகவும் இப்பகுதியினுடைய மக்களின் முழு ஒத்துழைப்பும் இருப்பதன் காரணமாகவும், இந்த அரசு மீண்டும் இதை பரிசீலனை செய்து இங்கே ஒரு ஐ.டி.ஐ. தொடங்க ஆவனசெய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் மூன்று அரசினர் தொழில் பயிற்சி மையங்கள் உள்ளன. மேலும் அங்கீகரிக்கப்பட்ட 25 தனியார் தொழில் பயிற்சி மையங்கள் இருக்கின்றன. ஆகமொத்தம் 28 தொழில பயிற்சி மையங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக தொழிற்பயிற்சி மையம் துவக்கவேண்டுமென்றதைத் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது கரூர் கல்வி மாவட்டத்திலே எந்தவிதமான அரசு தொழிற் பயிற்சி நிலையமும் இல்லை என்றுதான். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு தனியார் முன்வருவார்களானால் அதற்குண்டான-தனியார் ஐ.டி.ஐ. துவக்குவதற்கு முன்வருவதற்கான ஏற்பாடு செய்வோம் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையிலே தனியார் தொழிற்பயிற்சி நிறுவனம் அதாவது ஐ.டி.ஐ. துவக்க முன்வருவார்களானால் எந்த விதத்திலே அவர்களுக்கு அரசாங்கம் அதிலே ஆதரவு கொடுத்து அவர்கள் துவக்குவதற்கு உண்டான ஏற்பாடுகள் செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விண்ணப்பப் பாரங்களை பூர்த்தி செய்து அனுப்பினால் அதற்குரிய நடவடிக்கை